திரு. துரை. கலியமூர்த்தி : தலைவரவர்களே, பிச்சாவரத்தை சுற்றுலா மையமாக ஏற்படுத்த அங்கே எல்லா வசதிகளையும் ஏற்படுத்த வேண்டிய அவசியம் இருக்கிறது. ரோடு வசதியை முதலில் செய்ய வேண்டும். அடுத்து இறால் உற்பத்தித் தொழிலைப் பெருக்குவதற்காக மத்திய சர்க்கார் மூலம் ஏற்படுத்தினார்கள். அது விரைவில் முடிக்கப்படுமா, தமிழக அரசு அதற்கு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :—தலைவரவர்களே, இறால் உற்பத்தியைப்பற்றிய கேள்வியை மீன் வளத்துறை அமைச்சரிடத்தில் கேட்டால் தகுந்த பதில் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வட ஆற்காடு மாவட்டத்தில் பணி நீக்கம் செய்யப்பட்ட ஆசிரியர்கள்.

*வினா—449— திரு. ரா. மார்க்கபந்து : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்கு விடையளிப்பாரா:

வட ஆற்காடு மாவட்டத்தில் பணி நீக்கம் செய்யப்பட்ட 120 ஆசிரியர்களில் இன்னும் 78 ஆசிரியர்களுக்கு ஜி. ஓ. நெ. 1395, கல்வி, நாள் 17—6—1977-படி வேலை கொடுக்கப்படாததற்கான காரணம் யாது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : வட ஆற்காடு மாவட்டத்தில் 1976-77 கல்வியாண்டின் இறுதியில் அரசுப் பள்ளிகளிலிருந்து பணி நீக்கம் செய்யப்பட்ட 131 தற்காலிக பட்டதாரி ஆசிரியர்கள் அனைவரும் 1977 செப்டம்பர் திங்கள் இறுதிக்குள் மீண்டும் பணியில் அமர்த்தப்பட்டு விட்டனர்.

திரு. ப. சந்திரன் : தலைவரவர்களே அப்படிப் பணி நீக்கம் செய்யப்பட்டு மீண்டும் சேர்க்கப்பட்ட ஆசிரியர்கள் மீண்டும் பணி நீக்கம் செய்யப்படாமல் அவர்கள் தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மூலமாகத் தகுதித் தேர்வு எழுதி அவர்களுடைய வேலையை நிரந்தரமாக்க அரசுக்கு உத்தேசம் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே அதுபற்றித் தனிக் கேள்வி போடவும்.